In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

E.A.No.3/2022 in E.P.No.14/2012 in O.S.No.26/2004

Deposition of the **P.**W.2 witness for

| | | |
|---|---|---|
| Name | : | ஜாண்சன் |
| Father's Name | : | |
| District | : | |
| Taluk | : | |
| Village | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 23.04.2024 |

Solemnly affirmed by Thiru/Tmt. Bench Clerk Grade-III, Principal District Munsif Court, Padmanabhapuram in accordance with the Provision of Act XLIV of 1893.

<u>முதல் விசாரணை</u>

1. 07.07.2010 அன்று மின்சார வாரியத்தில் இருந்து மின் இணைப்பை துண்டித்து விட்டார்கள். மேற்படி சம்பவத்தை ஆலை உரிமையாளரிடம் தெரியபடுத்தினேன். அதற்கு அவர் வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் நாளை வாருங்கள் பார்த்துக்கொள்ளலாம் என்று கூறினார். 08.07.2010 அன்று காலை சுமார் 8 மணியளவில் ஜேசிபி உதவியுடன் செல்வராஜ் அவருடைய மக்கள் நீதிமன்ற ஆணையர் மற்றும் போலீசார் வந்து ஆலையின் நுழைவாயிலை உடைத்து ஆலையில் உள்ளே இருந்த எந்திரங்கள் மற்றும் அறுத்து வைத்திருந்த மரதுண்டுகளையும் இரவு 9 மணிக்கு மேல் வரை எடுத்து சென்று விட்டார்கள்.

ஆலையின் முதலாளி அவர்களிடம் வந்து உச்சநீதிமன்ற தடைஉத்தரவு உள்ளது என்று கூறியும் அவர்கள் மேற்படி பொருட்களை எடுத்து சென்று விட்டார்கள். அப்போது செல்வராஜ் அவருடைய மக்களும் சேர்ந்து என்னுடைய முதலாளியை பார்த்து உங்களை வெட்டிவிடுவோம் கொன்று விடுவோம் என்று மிரட்டினார்கள். அதன் பின்பு நாங்கள் எங்கள் வழக்கறிஞரை பார்க்க தக்கலைக்கு வந்து விட்டோம்.

2. மேற்படி ஆலையின் பெயர் ஸ்ரீராம் மரஅறுவை ஆலை. ம.சா.ஆ.2 -இல் உள்ளவைகள் தான் மேற்படியார்களால் எடுத்து செல்லப்பட்ட மரங்கள் என்றால் சரிதான். மேற்படியார்களால் எடுத்து சென்ற இயந்திரங்களின் அன்றைய தேதிய மதிப்பு சுமார் 25 லட்சம் முதல் 30 லட்சம் வரை இருக்கும். மேற்படியார்களால் எடுத்துச்செல்லப்பட்ட வெளியாட்களின் மரங்களின் மதிப்பு ரூபாய்.20 லட்சமும் முதலாளிக்கு உரிமைப்பட்ட மரங்களின் மதிப்பு ரூபாய் 18 முதல் 20 லட்சம் இருக்கும். மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். என்னுடன் அப்போது யார் யார் வேலை பார்த்தார்கள் என்றால் மணிகண்டன் என்பவர் ஆவார். அவரும் மேற்படி சம்பவத்தை பார்த்தார். நாங்கள் தகவல் கொடுத்தவுடன் முதலாளி உடனே வந்து பார்த்தார்.

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.